# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2015 மார்ச் திங்கள் 31–ம் நாள் (31.03.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

உறுப்பினர் செயலர் (பொ) மாநில திட்டக்குழு, சென்னை அவர்களின் செயல்முறைகள் எண்.4119/2014/ஆர் & டி.பி/ எஸ்.பி.சி. – நாள் 23.02.2015–ன்படி, மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி 2014–15–ன் கீழ், இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் வணிக வளாகத்தில், ரூ.2,53,63,000/– மதிப்பீட்டில் ‘‘மீன் பதப்படுத்துதல் மற்றும் சிறப்பங்காடி திட்டத்திற்கான மதிப்புக்கூட்டு பயிற்சி அளித்தல்‘‘ பணிக்கு கீழ்காணும் விவரப்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No. | Item | No. of units | Unit cost | Project cost | Community / Beneficiary contribution | Institution/ other contri-bution | SBGF contribution |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Erection of 10 KW capacity Bio Methanisation Plant | 1 | 1500000/- | 1500000/- | 0.00 | 150000/- | 1350000/- |
| 2 | Providing Water Supply Sanitary arrangements at Fish market (Toilets and Rest rooms ) | -- | -- | 2500000/- | 0.00 | 100000/- | 2400000/- |
| 3 | Construction of Storm Water Drain with cover slab. | -- | -- | 1500000/- | 0.00 | 0.00 | 1500000/- |
| 4 | Errection of 30 KW capacity Solar Power Plant | 1 | 3000000/- | 3000000/- | 0.00 | 300000/- | 2700000/- |
| 5 | Construction of Modern Fish Market. | -- | -- | 12000000/- | 0.00 | 1200000/- | 10800000/- |
| 6 | Construction of Cold Storage Godown.. | -- | -- | 3000000/- | 0.00 | 300000/- | 2700000/- |
| 7 | Errection of 250 KW capacity Eco Friendly sound proof Diesel Generator. | -- | -- | 1500000/- | 0.00 | 150000/- | 1350000/- |
| 8 | Training. | -- | -- | 363000/- | 0.00 | 0.00 | 363000/- |
| | **Total** | | | **25363000/-** | **0.00** | **2200000/-** | **23163000/-** |

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/2861/2014)

**தீர்மான எண் : 1140 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சியில், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கப்பட்ட திறன் மேம்பாட்டு நிதி 2014–15–ன் கீழ், பிளாஸ்டிக் உடைப்பு இயந்திரத்துடன் கூடிய சேகரிப்பு நிலையம் மற்றும் இயந்திர அறை அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினமுரசு நாளிதழின் 06.03.2015–ம் தேதிய பதிப்பில் வெளியிட்ட வகையில் ரூ.3,375/–ஐ செலுத்த கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட பத்திரிகை அலுவலகத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/376/2015)

**தீர்மான எண் : 1141 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் வணிக வளாகத்தில், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி 2014–15 திட்டத்தின் கீழ், ரூ. 2.53.63.000/– மதிப்பீட்டில் ''மீன் பதப்படுத்துதல் மற்றும் சிறப்பங்காடி திட்டத்திற்கான மதிப்புக்கூட்டு பயிற்சி அளித்தல்'' பணிக்கான திட்ட பிரேரணை தயார் செய்யும் பணியினை, அவசர அவசியம் கருதி, நகராட்சி சட்ட பிரிவு 15–ன்கீழ் மேற்கொண்டு, அதற்கான செலவுத் தொகை ரூ.1,425/– ஐ இந்நகராட்சி பொது நிதியின்கீழ் வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/2861/2014)

**தீர்மான எண் : 1142 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 4**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்துார் அவர்களின் கடிதம் ந.க.எண்.849/204/Actt. நாள் 09.03.2015–ன்படி, இந்நகராட்சி 2014–15–ம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய பங்குத் தொகை ரூ.50,000/– மற்றும் நிலுவைத் தொகை ரூ.1,00,000/– ம் செலுத்த தெரிவிக்கப்பட்டது. அதன்படி இதுவரையிலான மொத்த பங்கு தொகை ரூ.1,50,000/– செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/1542/2001)

**தீர்மான எண் : 1143 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்கு சொந்தமான அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை 2015–16 முதல் 2017–18 வரை மூன்றாண்டுகளுகான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பத்திரிகையில் விளம்பரம் செய்த வகையில் தினப்பூமி பத்திரிகைக்கு வெளியிட்ட வகையில் ரூ.14,664/–ஐ பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/11060/2015)

**தீர்மான எண் : 1144 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சி ஒப்பந்தப் பணிகள் தொடர்பான விவரங்களை மின்னணு முறையில் இணையதளத்தில் ஏற்றம் செய்வதற்கு, இந்நகராட்சி பொறியாளருக்கு Digital Signature Certificate புதிதாக பெறுதல் மற்றும் நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளரின் Digital Signature Certificate 10.12.2014–ல் காலாவதியாகி விட்டதால் அதனை புதுப்பிப்பதல் ஆகிய பணிகளை அவசர அவசியம் கருதி, நகராட்சி சட்டப்பிரிவு 15–ன் கீழ் மேற்கொண்டு, அதற்கான செலவுத் தொகை ரூ.3,500/– இந்நகராட்சி பொது நிதியின்கீழ் வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/280/2010)

**தீர்மான எண் : 1145 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு போதுமான துப்புரவு பணியாளர்கள் இல்லாமையால், பொது சுகாதார நலன் கருதி டெங்கு நோய் தடுப்பு, பன்றி காய்ச்சல் நோய் தடுப்பு அபேட் மருந்து தெளித்தல், வடிகால்கள் துார் வாருதல், புகை மருந்து அடித்தல் ஆகிய பணிகளை தினமும் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ந.க.எண்.அ1/110610/2013 நாள் 25.04.2013–ல் தெரிவிக்கப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் 15 பணியாளர்களை பணியமர்த்த 89 நாட்களுக்கு இந்நகர்மன்ற தீர்மானம் 1082 நாள் 31.12.2014–ன் படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளவும், வடிகால்கள் துார் வாரவும் மேலும் 89 நாட்களுக்கு 15 தினக்கூலி பணியாளர்களை கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான உத்தேச செலவு ரூ.4,50,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பொது சுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1177 /2014)

**தீர்மான எண் : 1146 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்கு குடிநீர் வினியோகப் பிரிவுக்கு தேவையான பிளீச்சிங்பவுடர் வாங்க உத்தேசச் செலவு ரூ.50,000/– இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1112 நாள் 30.01.2015–ல் அனுமதி வழங்கியுள்ளது. அதன்பேரில் 06.03.2015–ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | M/s.K.K.Industries,<br>15/113.South Car Street, Thazhakudi. | ரூ. 29/– 1 கிலோ மதிப்பீட்டு விகிதம். |
| 2. | M/s.Jaya Paba Trader,<br>15/114.B.Bazzar Street,Thazhakudi. | ரூ. 30/– 1 கிலோ |

இதில் கே.கே.இன்டஸ்டீரிஸ் நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவானது. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள கே.கே.இன்டஸ்டீரிஸ் நிறுவனத்திற்கு வினியோக உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள கே.கே.இன்டஸ்டீரிஸ்–க்கு வினியோக உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். இ2/1110/2008)

**தீர்மான எண் : 1147 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்த புள்ளி ஏற்று கொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14–ல் ஏற்கனவே அமைந்துள்ள பொதுக் கழிப்பிடத்தை இடித்து அகற்றிவிட்டு Universal Design Toilet கட்டும் பணியினை ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட திருத்திய மறு மதிப்பீட்டை ஏற்றும், இந்நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், மேற்படி பணியினை துறை மூலம் மேற்கொள்வதற்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ரத்து செய்வதற்கும், இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1127 நாள் 26.02.2015–ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 27.02.2015 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.02% குறைவு. |

| | | |
|---|---|---|
| 2. | திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 4.66% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி, இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பணியின் அவசர அவசியம் கருதி, இந்நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். இ1/2669/2013)

**தீர்மான எண் : 1148 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பணி உத்தரவு ஏற்று கொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15–ல் ஏற்கனவே அமைந்துள்ள பொதுக் கழிப்பிடத்தை இடித்து அகற்றிவிட்டு Universal Design Toilet கட்டும் பணியினை ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட திருத்திய மறு மதிப்பீட்டை ஏற்றும், இந்நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், மேற்படி பணியினை துறை மூலம் மேற்கொள்வதற்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ரத்து செய்வதற்கும், இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1127 நாள் 26.02.2015–ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 27.02.2015 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.ஜாண்றோஸ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.02% குறைவு. |
| 2. | திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.54% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.S.ஜாண்றோஸ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி, இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பணியின் அவசர அவசியம் கருதி, இந்நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். இ1/2669/2013)

**தீர்மான எண் : 1149 – Universal Design Toilet கட்ட அப்பகுதி மக்களின் எதிர்ப்பின் காரணம், இப்பணிக்கான உத்தரவை ரத்து செய்திட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. அ.கு. ஏற்று கொள்ளப்படாமல் ரத்து செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சியில், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கப்பட்ட திறன் மேம்பாட்டு நிதி 2014–15–ன் கீழ், பிளாஸ்டிக் உடைப்பு இயந்திரத்துடன் கூடிய சேகரிப்பு நிலையம் மற்றும் இயந்திர அறை அமைக்கும் பணிக்கு ரூ.14.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட விவரம், இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1138, நாள் 26.02.2015–ன்படி நகர்மன்றத்தால் பதிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் 20.03.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.ஜாண்றோஸ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.22% குறைவு. |
| 2. | திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 1.88% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.S.ஜாண்றோஸ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 0.22% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.கு.** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/376/2015)

**தீர்மான எண் : 1150 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் தொலைபேசி செய்தியின்படி, இந்நகராட்சியில் வறட்சி நிவாரணம் 2015–16–ன்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகள் குறித்த விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23, வெள்ளியாகுளம் மற்றும் வார்டு எண்.14 துறைமுகத்தெரு, புனித மேரி தொடக்கப்பள்ளி அருகில் ஆகிய இடங்களில் சிறு மின்விசையுடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைத்தல். | 5.00 |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 தும்பக்காடு மற்றும் வார்டு எண்.4 மலிக்காகிணறு, ஆகிய இடங்களில் சிறு மின்விசையுடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைத்தல். | 5.00 |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23 புல்லன்விளை, வார்டு எண்.12 துறைமுகத்தெரு, வார்டு எண்.22 இலப்பவிளை, வார்டு எண்.18 முகைதீன்பள்ளி மற்றும் வார்டு எண்.4 ஆசாரிமார் கீழத்தெரு ஆகிய இடங்களில் 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட HDPE தொட்டிகள் அமைத்தல். | 2.50 |
| 4 | இந்நகராட்சியில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறுகளில் புதிதாக 5 எண்ணம் 10 H.P. நீர்மூழ்கி மின் மோட்டார்கள் நிறுவுதல். | 3.50 |
| 5 | இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் சம்ப் முதல் சிங்காரவேலன் காலனி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வரை 110 mm பிவிசி குடிநீர் குழாய் நீட்டிப்பு பணி செய்தல். | 3.00 |
| 6 | இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு 2 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி முதல் துறைமுகத்தெரு –1 வரை 110 mm பிவிசி குடிநீர் குழாய் நீட்டிப்பு பணி செய்தல். | 2.80 |
| 7 | இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலை குறுக்கு தெரு முதல் ஓரியண்ட் பள்ளி வரை 110 mm பிவிசி குடிநீர் குழாய் நீட்டிப்பு பணி செய்தல். | 5.95 |
| | **மொத்தம்** | **27.75** |

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க.எண்.இ1/519/2015)

**தீர்மான எண் : 1151 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் கதவு எண்.11/38–ல் தற்போது ஆள் வசிக்காத காரணத்தால் தற்காலிகமாக குடிநீர் குழாய் இணைப்பு எண்.1207–ஐ துண்டிப்பு செய்யுமாறு மனுதாரர் திரு.ராபின்சன் என்பவர் கேட்டுக் கொண்டுள்ளார். மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரி, மற்றும் குடிநீர் கட்டண வரி ஏதும் நிலுவையில் இல்லை. எனவே மேற்படி குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்வது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/442/2015)

**தீர்மான எண் : 1152 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

குளச்சல் நகராட்சியின் புதிய துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு.என்.முகம்மது தாசீம் அவர்கள் தொலைபேசித் தொடர்பு வசதி செய்து தர கேட்டுக் கொண்டுள்ளார். எனவே நகர்மன்ற துணைத் தலைவர் இல்லத்தில் BSNL தரைவழித் தொலைத் தொடர்பு வசதி செய்து தர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.ச.அ./6920/2014)

**தீர்மான எண் : 1153 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் வணிக வளாகத்தில், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி 2014–15–ன் கீழ், ரூ. 2.53.63.000/– மதிப்பீட்டில் ‘‘மீன் பதப்படுத்துதல் மற்றும் சிறப்பங்காடி திட்டத்திற்கான மதிப்புக்கூட்டு பயிற்சி அளித்தல்‘‘ பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்படி பணியினை வடிவமைப்பு செய்து வரைபடம் தயார் செய்வதற்கும் மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெறும் வகையில் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்து தொழில் நுட்ப அனுமதி பெற்று சமர்ப்பித்தல் பணியினை ரூ.1,25,000/– மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, பணியின் அவசர அவசியம் கருதி, ,இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று 24.03.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.Saran Architects,<br>Er.R.Bala Subramanian,<br>Beach Road. Kottar,<br>Nagercoil. | மதிப்பீட்டைவிட 12% அதிகம்.<br>(ரூ.1,40,000/–) |
| 2. | M/s.Alex Architects,<br>Er.J.Alex Carbusiar,<br>Chettikulam Jn. Nagercoil. | மதிப்பீட்டு விகிதம்<br>(ரூ.1,25,000/–) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Alex Architects, Nagercoil நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : 1) பணியின் அவசர அவசியம் கருதி, இந்நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) M/s.Alex Architects, Nagercoil நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2861/2014)

**தீர்மான எண் : 1154 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்த புள்ளி ஏற்று கொள்ளப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சியில், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கப்பட்ட திறன் மேம்பாட்டு நிதி 2014–15–ன் கீழ், மேற்கொள்ளப்பட உள்ள 'பிளாஸ்டிக் உடைப்பு இயந்திரத்துடன் கூடிய சேகரிப்பு நிலையம் மற்றும் இயந்திர அறை கட்டுதல்' பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினமணி பத்திரிக்கையின் 06.03.2015–ம் தேதிய பதிப்பில் வெளியிட்ட வகையில் ரூ.5,990/–ஐ வழங்க கேட்டு Express Publication (Madurai) Limited, Tirunelveli நிறுவனத்திடமிருந்து பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/376/2015)

**தீர்மான எண் : 1155 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN–74 V 3530–ல் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்வதற்காக, மகேந்திரா & மகேந்திரா–வின் அங்கீகாரம் பெற்ற கொடை கார்ஸ் பிரைவேட் லிமிடெட், திருநெல்வேலி நிறுவனத்தில் வாகன சோதனை மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் கடந்த 20.12.2014–ல் ரூ.31,122/–க்கு விலைப்புள்ளி பெறப்பட்டு, மேற்படி நிறுவனத்தின் மூலம் பழுதுகளை சரி செய்வதற்கும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், இந்நகர்மன்ற தீர்மானம் எண். 1116 நாள் 30.01.2015–ன் மூலம் மன்ற ஒப்புதல் பெறப்பட்டது. அதன் பின்னர் அலுவலக அத்தியாவசிய பணிகள் மற்றும் போலியோ சொட்டு மருந்து முகாம் பணிகளுக்கு மேற்படி வாகனம் பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில், வாகனம் இயக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டதை தொடர்ந்து, கொடை கார்ஸ் பிரைவேட் லிமிடெட், திருநெல்வேலி நிறுவனத்தில் வாகனம் பழுது நீக்க பணிகளுக்காக ஒப்படைக்கப்பட்டு, ஏற்கனவே பெறப்பட்ட விலைப்புள்ளியில் குறிப்பிடப்பட்ட பழுதுகளுடன் கூடுதலாக ஏற்பட்ட பழுதுகளையும் சரி செய்த வகையில் ரூ.41,350/– வழங்க கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. அலுவலக பணிகளில் மேற்படி வாகனத்தின் அவசியத்தை கருத்தில் கொண்டு, ஏற்கனவே அனுமதி பெறப்பட்ட ரூ.31,122/– போக கூடுதல் செலவினம் ரூ.10,228/–க்கு இந்நகர்மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி, இந்நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று, பட்டியல் தொகை ரூ.41,350/– ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அலுவலக பணிகளில் மேற்படி வாகனத்தின் அவசியத்தை கருத்தில் கொண்டு, கூடுதல் செலவினம் ரூ.10,228/–க்கு இந்நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று, பட்டியல் தொகை ரூ.41,350/– ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.இ1/5030/2010)

**தீர்மான எண் : 1156 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. கூடுதல் தொகையினை மன்றம் அங்கீகரிக்கிறது.**

**பொருள் எண். 18**

இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை 2015–16 முதல் 2017–18 வரையுள்ள ஆண்டுகளுக்கு அனுபவித்து கொள்ளும் உரிமத்திற்கான பொது ஏலம் 18.02.2015 அன்று நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. ஏலதாரர்கள் ஏல முன்வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்ட விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏல இனம் | கலந்து கொண்ட ஏலதாரர் விபரம் | 2014–15 வரை உள்ள ஏலத் தொகை விபரம் (ஓர் ஆண்டு) | 18.03.2015 நடைபெற்ற ஏலக் கேள்வி தொகை (ஓர் ஆண்டு) |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி பகுதியிலிருந்து வெளியே கொண்டு செல்லும் மீன்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1) இ.பால்ஞானசேகரன் | ரூ. 1,08,045/– | ரூ. 1,15,000/– |
| | | 2) எம்.ஷாகுல் ஹமீது | – | ரூ. 1,14,400/– |

1) மேற்படி நடைபெற்ற பொது ஏலத்தில் இரண்டு ஏலதாரர்கள் கலந்து கொண்டனர்.
2) 2014–15 –ம் ஆண்டு ஏலத் தொகையினை விட அதிகபட்ச ஏலத் தொகையாக உள்ளது.
3) அதிக ஏலக்கேள்வி தொகை கேட்டுள்ள திரு.இ.பால்ஞானசேகரன் என்பவரின் ஏலக்கேள்வி ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/11062/2015)

**தீர்மான எண் : 1157 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை 2015–16 முதல் 2017–18 வரையுள்ள ஆண்டுகளுக்கு அனுபவித்து கொள்ளும் உரிமத்திற்கான பொது ஏலம் 05.03.2015 அன்று நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. ஏலதாரர்கள் ஏல முன்வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்ட விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏல இனம் | கலந்து கொண்ட ஏலதாரர் விபரம் | 2014–15 வரை உள்ள ஏலத் தொகை விபரம் (ஓர் ஆண்டு) | 05.03.2015 நடைபெற்ற ஏலக் கேள்வி தொகை (ஓர் ஆண்டு) |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்ட அண்ணாசிலை சமீபம் உள்ள நகராட்சி கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1) ஆர்.ஐயப்பன் | ரூ. 4,444/– | ரூ. 5,900/– |
| | | 2) ஆர். முருகன் | – | ரூ. 5,600/– |

1) மேற்படி நடைபெற்ற பொது ஏலத்தில் இரண்டு ஏலதாரர்கள் கலந்து கொண்டனர்.
2) 2014–15 –ம் ஆண்டு ஏலத் தொகையினை விட அதிகபட்ச ஏலத் தொகையாக உள்ளது.
3) அதிக ஏலக்கேள்வி தொகை கேட்டுள்ள திரு.ஆர்.ஐயப்பன் என்பவரின் ஏலக்கேள்வி ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/11062/2015)

**தீர்மான எண் : 1158 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20**

இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை 2015–16 முதல் 2017–18 வரையுள்ள ஆண்டுகளுக்கு அனுபவித்து கொள்ளும் உரிமத்திற்கான பொது ஏலம் 18.03.2015 அன்று நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. ஏலதாரர்கள் ஏல முன்வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்ட விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏல இனம் | கலந்து கொண்ட ஏலதாரர் விபரம் | 2014–15 வரை உள்ள ஏலத் தொகை விபரம் (ஓர் ஆண்டு) | 18.03.2015 நடைபெற்ற ஏலக் கேள்வி தொகை (ஓர் ஆண்டு) |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1) ஆர்.செல்வராஜ் | ரூ. 1,05,896/– | ரூ. 1,06,000/– |
| | | 2) கிரிதரன் | – | ரூ. 1,05,975/– |

1) மேற்படி நடைபெற்ற பொது ஏலத்தில் இரண்டு ஏலதாரர்கள் கலந்து கொண்டனர்.
2) 2014–15 –ம் ஆண்டு ஏலத் தொகையினை விட அதிகபட்ச ஏலத் தொகையாக உள்ளது.
3) அதிக ஏலக்கேள்வி தொகை கேட்டுள்ள திரு.ஆர்.செல்வராஜ் என்பவரின் ஏலக்கேள்வி ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/11062/2015)

**தீர்மான எண் : 1159 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21**

இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை 2015–16 முதல் 2017–18 வரையுள்ள ஆண்டுகளுக்கு அனுபவித்து கொள்ளும் உரிமத்திற்கான பொது ஏலம் 05.03.2015 அன்று நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. ஏலதாரர்கள் ஏல முன்வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்ட விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஏல இனம் | கலந்து கொண்ட ஏலதாரர் விபரம் | 2014–15 வரை உள்ள ஏலத் தொகை விபரம் (ஓர் ஆண்டு) | 18.03.2015 நடைபெற்ற ஏலக் கேள்வி தொகை (ஓர் ஆண்டு) |
|---|---|---|---|---|
| 1 | பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி மூலம் விளம்பரம் செய்யும் உரிமம். | 1) திசோன் மீடியா | ரூ. 68,072/– | ரூ. 69,300/– |
| | | 2) ஜோண் லெனின் | – | ரூ. 69,200/– |

1) மேற்படி நடைபெற்ற பொது ஏலத்தில் இரண்டு ஏலதாரர்கள் கலந்து கொண்டனர்.
2) 2014–15 –ம் ஆண்டு ஏலத் தொகையினை விட அதிகபட்ச ஏலத் தொகையாக உள்ளது.
3) அதிக ஏலக்கேள்வி தொகை கேட்டுள்ள திசோன் மீடியா என்பவரின் ஏலக்கேள்வி ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/11062/2015)

**தீர்மான எண் : 1160 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22**

இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை 2015–16 முதல் 2017–18 வரையுள்ள ஆண்டுகளுக்கு அனுபவித்து கொள்ளும் உரிமத்திற்கான பொது ஏலம் 18.02.2015, 05.03.2015 மற்றும் 18.03.2015 அன்று நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. ஏலதாரர்கள் ஏல முன்வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ளாத இனங்களின் விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1 | இந்நகராட்சி டாக்டர் அம்பேத்கார் வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். |
| 2 | இந்நகராட்சிக்கு சொந்தமான பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம். |
| 3 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பொட்டல் சாலை ஓர தென்னை மரம், நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள தென்னை மரம் மேல் ஆதாயம் (மகசூல்) அனுபவிக்கும் உரிமம். |

முன்வைப்புத்தொகை செலுத்தி ஏலதாரர் எவரும் குத்தகைக்கு எடுக்காததால் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு மேற்காணும் இனங்களுக்கு நகராட்சி மூலம் கட்டணங்கள் வசூல் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.அ1/11062/2015)

**தீர்மான எண் : 1161 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2015 மார்ச் திங்கள் 31–ம் நாள் (31.03.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சியின் 2014–15–ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும் 2015–16–ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்ட மதிப்பீடு ஆகியவை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.பி1/5630/2011)

**தீர்மான எண் : 1162 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள சாலைகள், வடிகால் ஓடைகள், மேல்மூடிகள், சிறுபாலங்கள், குடிநீர் வால்வு பிட்டுகள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதற்கு, 2015–16–ம் ஆண்டு பராமரிப்பு மதிப்பீட்டு கட்டணம் ரூ.4,00,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/662/2015)

**தீர்மான எண் : 1163 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் வணிக வளாகத்தில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி 2014–15–ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட உள்ள இடத்தினை ஸ்தல ஆய்வு செய்து மண் பரிசோதனை செய்து அறிக்கை பெறும் பணியினை, அவசர அவசியம் கருதி, நகராட்சி சட்ட பிரிவு 15–ன் கீழ் மேற்கொண்டு, அதற்கான செலவுத் தொகை ரூ.41,573/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் , தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/2861/2014)

**தீர்மான எண் : 1164 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2–ல் சி.எம்.சி.காலனி பாலத்தன்கரை குடிநீரேற்றும் நிலையம் அருகில் அமைந்துள்ள சிறுபாலம் உடைந்து மண் நிரம்பியுள்ளதால், மழைகாலங்களில் சிறுபாலம் வழியே மழைநீர் செல்ல முடியாமல் அருகில் உள்ள வீடுகளுக்கு சென்று விடுகிறது. மேலும் இதனால் அப்பகுதி சாலையும் சேதமடைந்து குண்டும், குழியுமாக காணப்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி, மேற்படி பகுதியில் புதிதாக சிறுபாலம் அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/–க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின்கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/663/2015)

**தீர்மான எண் : 1165 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் புதிதாக அமைந்துள்ள உரக்கிடங்கில் குப்பைகளை மக்க செய்வதற்கு பயன்படுத்தப்படும் EMI உயிர் திரவம் இருப்பில் குறைவாக உள்ளதால் மேற்படி கிருமி நாசினி வாங்க உத்தேச செலவு ரூ.25,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பொது சுகாதார அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1243/2013)

**தீர்மான எண் : 1166 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் உரக்கிடங்கில் குப்பைகளை கொட்டக்கூடாது என்று பொதுமக்கள் 23.03.2015 அன்று உண்ணாவிரதம் இருந்ததைத் தொடர்ந்து லியோன்நகர் களிமார் பகுதி பொதுமக்கள், குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் திரு.பிரின்ஸ், நகராட்சி ஆணையர் மற்றும் நகர்மன்றத் தலைவர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. பேச்சுவார்த்தையின் போது நகராட்சி குப்பைகளை முறையாக பிரித்து கொட்ட வேண்டும். மேலும் உரத்தினை உடனுக்குடன் அப்புறப்படுத்தவும், துர்நாற்றம் வீசாமல் தேங்கியுள்ள குப்பைகளை உடனே அப்புறப்படுத்தவும் நகர்மன்றத் தலைவர் மற்றும் நகராட்சி ஆணையர் அவர்களின் நேரடி அறிவுரையின்படி மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ந.க.எண்.அ1/110610/2013 நாள் 25.04.2013–ல் தெரிவிக்கப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் கூடுதலாக ஒரு மாதத்திற்கு 20 பணியாளர்களை பணியமர்த்திட உத்தேச செலவுத் தொகை ரூ.2,00,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : பொது சுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1368/2014)

**தீர்மான எண் : 1167 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி லாறி எண். TN-74-5508–க்கு தகுதிச்சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளதால், கீழ்க்கண்ட பழுதுகளை சரி செய்ய வேண்டியுள்ளது.

(1) முழு சர்வீஸ் மற்றும் கிரீஸ் அடித்தல்.
(2) முழு பெயின்டிங் செய்தல்.
(3) முன்கேபின் பேச் ஒர்க் செய்தல்.
(4) பின் தொட்டியில் பேச் ஒர்க் செய்தல்.
(5) பின் தொட்டியின் அடிப்பாகத்தில் கிறாஸ்பார் மாற்றுதல்
(6) எல்க்ட்ரிக் செக்கப் செய்தல் மற்றும் சில இதர பணிகள் செய்தல்.

மேற்படி பழுதுகளை சரி செய்ய உத்தேச செலவுத் தொகை ரூ.36,000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/2913/2009)

**தீர்மான எண் : 1168 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு காம்பேக்டர் லாறி எண். TN-75.L-2565–க்கான தகுதிச்சான்று புதுப்பிப்பதற்கான கீழ்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு திரு.வி.ராஜகுமார், மாற்றுப்பணி ஓட்டுநர் விண்ணபித்துள்ளார். பணிகளின் விபரம் கீழ்வருமாறு :

(1) வாகனம் சர்வீஸ் மற்றும் கிரீஸ் வைத்தல்.
(2) முழு பெயின்ட் அடித்தல்
(3) நான்கு வீல் கிரீஸ் வைத்தல் மற்றும் பிரேக் செக்கப்
(4) கீயர் பாக்ஸ் ஓவராயிலிங் செய்தல்
(5) டிப்பர் கியர் பாக்ஸ் சரி செய்தல்.
(6) கிளட்ச் அசெம்பிளி மாற்றுதல்
(7) நான்கு புற பட்டை கட்டுதல்
(8) ஹைட்லைட் இடது புற கவுல் மாற்றுதல்
(9) எலக்ட்ரிக் செக்கப் மற்றும் பின்புற இரு இன்டிகேட்டர் லைட் மற்றும் முன் இடதுபுற லைட் மாற்றுதல்.
(10) கிரீஸ் நிம்பிள் (ஹைட்ராலிக்) மாற்றுதல்.
(11) ஹைட்ராலிக் லிப்ட் லிவர் சரி செய்தல்
(12) பம்பர் (முன்) பென்டு சரி செய்தல்

மேற்படி பழுதுகளை சரி செய்ய உத்தேச செலவு ரூ.86,008/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1841/2013)

**தீர்மான எண் : 1169 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 1 முதல் 24 வரையிலான வார்டுகளில் உள்ள இடிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்ட கட்டிடங்களுக்கான சொத்துவரி கேட்புகளின் வரியினை ரத்து செய்ய பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : வார்டு 1 முதல் 24 வரையிலான வார்டுகளில் உள்ள சொந்தக் கட்டிடங்கள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டு அதன் கேட்பு தொகை அதிகமாகிக் கொண்டு வருகிறது. காலாவதியான கேட்புகளை வசூல் செய்ய வழிவகை இல்லை என்பதால் அதன் கேட்பு நிலுவைத் தொகை ரூ.1,70,082/– நீக்கம் செய்யலாம்.

(ந.க.எண். அ1/796/2011)

**தீர்மான எண் : 1170 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. கேட்பு நிலுவை தொகை ரூ.1,70,082 நீக்கம் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு 4 மற்றும் 18 –ல் உள்ள ஆசிரியர் குடியிருப்பு, தமிழ்நாடு பனைவெல்லம் (ம) தும்புவிற்பனை நிலைய கட்டிடங்கள் இடித்து தரைமட்டமாகி உள்ளதால் அதன் சொத்துவரி கேட்பு தொகை ரூ.4,61,282/– நீக்கம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : அரசு கட்டிடங்கள் செயல்பாட்டில் இல்லாமல் இடித்து தரைமட்டமாகி உள்ளதாலும், மேற்படி கட்டிடங்களுக்கு நிலுவைத் தொகை செலுத்த அறிவிப்பு அனுப்பப்பட்டும், அதன் நிலுவைத்

தொகை செலுத்த வழிவகை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி கட்டிடங்களின் சொத்துவரி தொகையினை ரத்து செய்யலாம்.

(ந.க.எண். அ1/796/2011)

**தீர்மான எண் : 1171 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. சொத்து வரி நிலுவை தொகையினை கட்டிடங்கள் இல்லாத காரணத்தால் ரத்து செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டுகள் 1 முதல் 24 வரையில் உள்ள இடிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்ட கட்டிடங்களின் சொத்துவரியினை ரத்து செய்த பின்னரும், அதன் குடிநீர் இணைப்புகளின் கேட்பு எழுப்பப்பட்டு வருகிறது. ஆகவே அக்குடிநீர் இணைப்புகளின் கேட்பு தொகை ரூ. 1,25,776/– நீக்கம் செய்ய பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மேற்படி பட்டியலில் உள்ள சொத்துவரி விதிப்புகளின் கட்டிடங்களின் வரி ரத்து செய்யப்பட்ட பின்னரும், குடிநீர் இணைப்பு கேட்பு தொடர்ந்து கொண்டே வருவதால், அதன் கேட்பு தொகை ரூ.1,25,776/– நீக்கம் செய்யலாம்.

(ந.க.எண். அ1/796/2011)

**தீர்மான எண் : 1172 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. குடிநீர் இணைப்பு கேட்பு தொகை ரூ.1,25,776 – ஐ நீக்கம் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி